பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 19 | வெள்ளிக்கிழமை | 03.01.2025 | அதிர்வு 154

## கிளிநொச்சி விபத்து: தாயும் நேற்று மரணம்

கிளிநொச்சியில் இடம்பெற்ற டிப்பர் – மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் நேற்று 05▶



# வாக்குறுதியை மீறினால் கோட்டாவின் நிலையே அநுரவுக்கும் ஏற்படும்!



## இப்படி மைத்திரி எச்சரிக்கை

“மக்களுக்கு வழுங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீறினால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட நிலையே அவருக்கும் ஏற்படும்.”

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்தார். 05▶

## திருகோணமலை மாணவர் படுகொலை நினைவேந்தல்



திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 5 தமிழ் மாணவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று மாலை 05▶

## ஊடகர் மீது தாக்குதல் நடத்திய 6 பேர் கைது!

(பாறுக் ஷிஹான்)

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரைத் தாக்கிய 6 சந்தேகநபர்களைச்சம்மாந்துறைப்பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைனாகாடு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரைத் தாக்கி 05▶






கடந்த பத்து வருடங்களாகத் தமிழரசு கட்சியின் தலைமைப் பதவியை பற்றிப் பிடித்து வைத்திருந்து, கட்சியின் நிர்வாகத்தையே சீரழித்த மாவை சேனாதிராஜா, பதவியை விட்டு விலகிய பின்னரும் கட்சியை உருப்பட விடும் எண்ணம் இல்லாதவராக நடந்து கொள்கின்றார்.

தமிழரசு கட்சியின் தலைமைப் பதவி பத்து வருடம் கழிந்த பின்னணியில் இப்போது தம்மிடமிருந்து வலிந்து பிடுங்கப்பட்டிருப்பதாகப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டு அவர் எல்லோரின் காதுகளிலும் பூச்சுற்றுகின்றார்.

அவர் சமர்ப்பித்த – கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகுகின்ற – ராஜினாமாக் கடிதத்தின் அடிப்படையிலேயே அவர் பதவியை துறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அப்படிப் பார்த்தால், அத்தகைய ராஜினாமாக் கடிதத்தை அவரைக் கொண்டு வெளியிட வைத்தவர்கள்தான் அவரின் பதவி பறிப்புக்கு அல்லது பதவிப் பிடுங்கலுக்குக் காரணமாக இருக்க வேண்டியவர்கள். 05▶

# நேபாள பிரதமர் சர்மாவுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு



நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலிக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

காத்மண்டு – பலுவட்டாரில் உள்ள நேபாள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, நேபாளம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர நலன்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நேபாள பிரதமர் செயலகத்தின் சார்பில், அதன் பிரதிநிதிகள் சபை உறுப்பினரும், தொழிலதிபருமான பினோத் சௌத்ரியும் கலந்துகொண்டிருந்தார்.

கடந்த 28 ஆம் திகதி தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேபாளம் சென்றிருந்தார்.

# உணவுப்பொதியின் விலை அதிகரிக்கும் சாத்தியம்



தற்போதைய அரிசி விலைக்கு அமைய எதிர்காலத்தில் உணவுப்பொதி ஒன்றின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அநுராதபுர மாவட்ட சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அச்சங்கத்தின் தலைவர் இந்திக்க அருண குமார, தற்போதைய அரிசி நெருக்கடி காரணமாக அப்பகுதியிலுள்ள உணவகங்கள் மூடப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 5,200 மெற்றிக் தொன் அரிசியின் இரண்டாவது தொகுதியான 580 மெற்றி தொன் அரிசி நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தது.

# அநுர அரசின் மீது மக்கள் நம்பிக்கையீனம்!

## மொட்டுக் கட்சி கண்டுபிடிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு மக்கள் நம்பிக்கையை இழந்து வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மொட்டுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சஞ்சீவ எதிரிமான்ன ஊடகங்களிடம் மேலும் கூறுகையில்,

"இந்த அரசு வழங்கிய வாக்குறுதிகளுக்கும், செய்கின்ற செயலுக்கும் இடையில் பெரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதை மக்களும் தற்போது புரிந்துகொண்டுள்ளனர்.

தங்களது பாரம்பரியக் கட்சிகளையெல்லாம் விட்டுவிட்டுதான் இந்த அரசுக்கு வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என அனைத்துப் பகுதி மக்களும் ஆதரவு வழங்கினார்கள். ஆனால், தற்போது அரசு மீதான மக்களின் நம்பிக்கை குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

2015ஆம் ஆண்டு பின்னடைவைச் சந்தித்து 2018ஆம் ஆண்டில் மீண்டெழுந்தது போல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மீண்டெழும். அதற்கேற்ற வகையில் கட்சி கட்டியெழுப்பப்படும்." – என்றார்.




# எஞ்சின் பற்றாக்குறையே ரயில் தாமதங்களுக்கு காரணம்

ரயில் சேவையில் ஏற்படும் தாமதங்களுக்கு ரயில் எஞ்சின் பற்றாக்குறையே காரணமாக அமைந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது 15 முதல் 20 வரையான எஞ்சின்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக ரயில்வே பொதுமுகாமையாளர் இதிபொலகே தெரிவித்துள்ளார்.

திட்டமிடப்பட்ட நேர அட்டவணைக்கமைய ரயில் சேவையை முன்னெடுப்பதற்கு சுமார் 48 எஞ்சின்கள் தேவைப்படுமெனவும் அவர் கூறினார்.

பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட எஞ்சின்களை மீண்டும் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கான காலதாமதமும் ரயில் சேவையில் தாக்கம் செலுத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார்.




# பெரும்போக செய்கைக்கான நெல் கொள்வனவு இம்மாதம்



பெரும்போகத்துக்கான நெல் கொள்வனவு இந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம் ஜயவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கத்திடம் உள்ள அரிசி கையிருப்பை அதிகரிக்கவும், லங்கா சதொச நிறுவனங்களின் ஊடாக அரிசி விற்பனையை விரிவுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு விவசாயிகளிடம் இருந்து அதிகளவான நெல்லை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.







# தனிப்பட்ட நலனை முன்னிறுத்தியமையால் பொருளாதார நிலையம் திறக்கப்படவில்லை

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க சுட்டிக்காட்டு

(கி.வசந்தன்)

தனிப்பட்ட நலனை முன்னிறுத்தியமையால் வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தைத் திறக்க முடியாமல் உள்ளது என்று வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலே பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

"295 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையமானது, சில அரசியல் தலையீடுகள், இனம் சார்ந்த பிரச்சினைகள், வியாபாரிகள் அல்லது தனிப்பட்ட நலனை முன்னிறுத்தியமை போன்றவற்றால் அதனை ஆரம்பிப்பதற்கு தற்போது வரை ஒரு இழுபறி நிலை காணப்படுகின்றது.

மேலும் இது தொடர்பாக பல்வேறு முன்னோடி நடவடிக்கைகள் அரச அதிபரால் முன்னெடுக்கப்பட்டபோதும் அதனைத் திறக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே, அடுத்த மாத நடுப் பகுதியிலே இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிபரும் இணைந்து இது தொடர்பாகக் கலந்துரையாடுவதுடன், இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பதற்கான நடவடிக்கையை அடுத்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும்." – தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைக்குச் சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்து கலந்துரையாடுவதன் மூலமாக இதற்கான தீர்வை இலகுவாக எடுக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்தார்.

மேலும் விரைவில் பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அப்படி தலைவர் பதவியில் மாவை சேனாதிராஜா இருக்கும்போது, அவரது ராஜினாமாக் கடிதத்தை வெளியிட வைத்த பிரகிருதிகள் யார் என்பதை தேடி கண்டறிய வேண்டும். அவர்களே மாவையின் தலைமைப் பதவியை அவரிடம் இருந்து – அவர் கூறுவது போல – பிடுங்குவதற்குக் காரணகர்த்தர்கள். இப்படி தூண்டியவர்களைக் கண்டுபிடித்தால் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க முடியும்.

ஆயினும், கட்சி உருப்படுவதற்கான ஒரு நடவடிக்கையாக அதை முன்னெடுத்த அவர்கள், அதற்காக பாராட்டப்படவும் வேண்டும் என்பதுதான் என் கருத்து.

கட்சியின் கடந்த மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா பதவியில் நீடிக்கிறாரா என்பது தொடர்பில் முடிவு செய்ய வாக்கெடுப்பு நடைபெற இருந்தது. அந்த வாக்கெடுப்பில் மாவை தரப்புக்கு பெருந்தோல்வி நிச்சயம் என்ற பின்புலத்தில், அவர் சார்பில் முன்னிலையான பிரதிநிதிகளினால் இணக்கமான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

அவரது மகன் கலையமுதன், அவரது வலது கையான கட்சியின் இணைப் பொருளாளர் கனகசபாபதி, மற்றும் அண்மை காலத்தில் அவருக்காகக் குரல் எழுப்பி நின்ற அரியகுட்டி பரஞ்சோதி ஆகிய மூவரும் மாவையை வெளியேற்ற தீர்மானித்திருந்த தரப்புகளுடன் பேசி, கௌரவமாக அரசியல் குழுத் தலைமைத்துவத்துடன் அவர் வெளியேறுவதற்கு இணக்கமான வழி காணப்பட்டது.

அப்படி இணக்கம் கண்ட பின்னர், இப்போது கட்சித் தலைமைத்துவத்தை விட்டு வெளியே வந்து தன்னுடைய பதவி பிடுங்கப்பட்டதாக அவர் கதை விடுகிறார்.

இந்த மனிதர் அரசியலில் திருந்தவே மாட்டார், பதவி ஆசை அவரை விட்டு விலகவே விலகாது என்பது மட்டும் நிச்சயம்.

\+ \+ \+

தேசிய மக்கள் சக்தி அரசின் சில தரப்புகள் வடக்கில் முன்னெடுக்கும் அரசியல் நடவடிக்கைகள் கூர்ந்து நோக்கப்படுகின்றன.

1983 ஜூலைக் கலவரத்துக்கு முன்னர் வடக்கில் எங்கெங்கு, எவ்வளவு, எவ்வளவு சிங்களவர்கள் இருந்தார்கள் என்ற கணக்கெடுப்பு கடந்த சில தினங்களாக நோண்டி எடுத்து சேகரிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதன் பின்புல நோக்கம் – திட்டம் – இன்னும் தெரியவில்லை.

இதற்கிடையில் தென்னிலங்கையில் இருந்து ஒரு தொகை எண்ணிக்கை சிங்களத் தரப்பினரைக் கூட்டி வந்து யாழ்ப்பாணத்தில் – நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அணமையில் – ஒரு மண்டபத்தில் இரத்ததானம் என்ற பெயரில் தானம் செய்யப்பட்ட இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் இதே போன்று வடக்கிலிருந்து தமிழர்களைக் கூட்டிச் சென்று தெற்கில் இரத்ததான நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன எனத் தெரிகின்றது.

இன முறுகலால் – யுத்தத்தினால் – இரத்த ஆறு ஓடிய இலங்கை தீவில் இப்போது இரத்ததானப் பரிமாற்றம் பற்றிய ஒரு சிந்தனை ஓட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இவற்றின் பின்புலக் காரணங்களை – விளைவுகளை – கொஞ்சம் 'ஆறுதலாக' யோசித்துப் பார்ப்போம்.

# முட்டை விலை மீண்டும் உயர்வு



கடந்த சில நாள்களாக சந்தையில் வீழ்ச்சியடைந்திருந்த முட்டையின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 36 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாள்களாக முட்டை விலை 28 ரூபாவாக குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாக்குறுதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளது. அவர்களின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும்.

எனக்கான பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பிரச்சினையும் இல்லை. பாதுகாப்புக்கென இருப்பவர்கள் அப்பணியை சிறப்பாக செய்கின்றனர்.

நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்தான். உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இன்னும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை."– என்றார்.

## ஊடகர் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடக உபகரணங்கள் பறிக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றது.

விவசாயிகளிடம் இருந்து கிடைத்த தகவலை அடுத்து சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் அச்சல உபேந்திர (வயது 50) மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளரின் புகைப்படக்கருவி, கைத்தொலைபேசி, ட்ரோன் கமரா ஆகியவை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன என்று இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலையப் பெரும் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் செயற்பட்டு ஊடகவியலாளர் வசம் இருந்து சந்தேகநபர்களால் அபகரித்துச் செல்லப்பட்ட ட்ரோன் கமரா, புகைப்படக் கருவி மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டன.

அத்துடன் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திய 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். மோட்டார் சைக்கிள், மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனம் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இது தவிர தாக்குதலுக்குள்ளான மேற்படி ஊடகவியலாளர் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சி விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

அன்னை இல்ல வீதி, கனகாம்பிகைக்குளம் பகுதியைச் சேர்ந்த கஜன் சாளினி (வயது 34) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த நத்தார் தினத்தன்று கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் என நால்வர் படுகாயமடைந்தனர். பின்னர் அவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த வேளை இரண்டு வயது குழந்தை உயிரிழந்தது.

இந்நிலையில் கணவனும், மனைவியும், ஒரு பிள்ளையும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக மனைவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை கடற்கரையில் நடைபெற்றது.

இராவணன் சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேற்படி படுகொலைச் சம்பவம் திருகோணமலை கடற்கரையில் 02.01.2006 அன்று இடம்பெற்றது.

இலங்கை இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் இணைந்து இந்தப் படுகொலையைச் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் லோகிதராசா ரொகான், சண்முகராஜாசஜீந்திரன், மனோகரன் வசீகர், தங்கத்துரை சிவானந்தன், யோகராஜா கேமச்சந்திரன் ஆகிய தமிழ் மாணவர்கள் உயிரிழந்தனர்.



# ஆண்டின் கன்னி நாடாளுமன்ற அமர்வை ஜனவரி 7 இல் கூட்டுவதற்கு தீர்மானம்

நாடாளுமன்றத்தை ஜனவரி 7ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு அமைய ஜனவரி 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 முதல் காலை 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலை 10.30 முதல் மாலை 5.30 வரை "மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2024" தொடர்பில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெறவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

ஜனவரி 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 முதல் காலை 10 மணிவரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (4 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் காலை10 மணி முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக (5 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலை 10.30 முதல் மாலை 5 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் மாலை 5 மணி முதல் 5.30 வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 முதல் காலை 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் காலை10.30 முதல் மு.ப 11.30 வரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஆறு கட்டளைகள், நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதிக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாலை 5.30 வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

ஜனவரி 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இதற்கு அமைய மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம,எச்.நந்தசேன மற்றும் டியூடர் குணசேகர ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளுக்காக அன்றையதினம் காலை 9.30 முதல் மாலை 5.30 வரையான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மேலும் தெரிவித்தார்.

# மக்களுக்கு உடனடி பதிலளிப்பதற்காக புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகம்



மக்களால் முன்வைக்கப்படும் கடிதங்களுக்கு உடனடியாக பதிலளிப்பதற்காகத் தொழில் அமைச்சினால் விசேட வட்ஸ்அப் இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

070722 7877 என்ற வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாக தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தில் மக்களால் முன்வைக்கப்படும் கடிதங்கள் தொடர்பில், உடனடியாக பதில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நேரம் மற்றும் செலவைக் குறைத்துக் கொள்வதற்காகவும், விரைவான பதிலைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அதிகாரிகளின் நேரத்தை முகாமைத்துவம் செய்து கொள்வதற்காகவும் இந்த விசேட வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

# பாடசாலை உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரியை நீக்கக்கோரி நிதியமைச்சிற்கு கடிதம்



பாடசாலை உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் எனப்படும் பெறுமதி சேர் வரியை நீக்குமாறு கோரி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நிதியமைச்சிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் சந்தரஜித் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக சந்தையில், பாடசாலை உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகப் பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான பின்னணியில், இந்த பிரச்சினைக்கு உடனடியாக தீர்வொன்றை வழங்குமாறு அவர் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாடசாலை உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் எனப்படும் பெறுமதி சேர் வரியை நீக்குவதற்கான கடிதம் ஒன்று நேற்று நிதியமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் பாடசாலை உபகரணங்களுக்கும் 18 சதவீத வற் வரி விதித்தது.

மேற்படி வரி நீக்கப்பட வேண்டும். அதற்காகவே நாம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளோம்.

தற்போதைய அரசாங்கம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தது போல,வற் வரி நீக்கப்பட வேண்டும்."– என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் சந்தரஜித் வலியுறுத்தியுள்ளார்.




# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த வருடத்தின் முதலாவது பயணிகள் கப்பல்

இந்த வருடத்தின் முதலாவது பயணிகள் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

ஒஷனியா ரிவேரா என்ற அதிசொகுசு ரக கப்பல் மாலி இராஜ்ஜியத்தில் இருந்து வருகை தந்துள்ளது.

1,185 பயணிகள் மற்றும் 750 பணிக்குழாமினருடன் அந்த கப்பல் பிரவேசித்துள்ளது.

நாட்டை வந்தடைந்தவர்கள் கொழும்பு, களனி ரஜமஹா விகாரை, பின்னவல யானைகள் சரணாலயம் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்காக சென்றுள்ளனர்.

எய்ட்கன் ஸ்பென்ஸ் பயண நிறுவனத்தின் தலையீட்டுடன் நாட்டை வந்தடைந்துள்ள மேற்படி கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் சென்றடையவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உயர் வகுப்புக் கல்வி

நீண்ட காலமாக நமது கல்வித்துறை எதிர்கொண்டு வரும் ஒரு சிக்கல் குறித்து - மாணவர்களின் பிரச்சினை குறித்து - சமூகத்தினால் திருத்தப்பாடாமல் இருக்கும் ஒரு நெருக்கடி குறித்து - கவனம் செலுத்தப் புறப்பட்டிருக்கிறார் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய என்று தெரிகிறது. வரவேற்கத்தக்க விடயம்.

உயர்தரவகுப்புக்களில்பயிலும்மாணவர்கள் பாடாசாலைக்கு - வகுப்புக்கு - சமூகமளிக்காத விடயம் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் எனவும், எந்தவொரு பிள்ளையும் எக்காரணம் கொண்டும் கல்வி வாய்ப்புகளை இழக்கக் கூடாது எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் கண்காணிப்பு விஜயத்தின் போது உரையாற்றிய பிரதமர், உயர்தர வகுப்பறைகளில், மாணவர்கள் வருகை குறைந்து வரும் போக்கை எடுத்துரைத்தார். அத்தோடு கல்வி முறையிலிருந்து விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பற்றியும் குறிப்பிட்டார்.

கல்வி ஒவ்வொரு பிள்ளைக்கும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். சமூக அல்லது பொருளாதார தடைகளிலிருந்து மாணவர் சமுதாயம் முழுமையாக விடுபட வேண்டும், குழந்தை பருவ வளர்ச்சியிலிருந்து பதின்மூன்று ஆண்டுகள் பள்ளிப்படிப்பு வரை உயர் கல்விக்கான வாய்ப்புகள் ஒவ்வொரு மாணவனுக்கும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தனிப்பட்ட மற்றும் சமூக மாற்றத்தை கல்வியின் முக்கிய நோக்கமாக மாற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உயர்தர வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் விடயத்தில் இரண்டு விதமான பிரச்சினைகள் உள்ளன.

ஒன்று - சமூக நெருக்கடிகள், பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக மாணவர்கள் பள்ளிக் கல்வியிலிருந்து விலகிச் செல்வது. உயர்தர வகுப்புகளுக்கு தேர்வு செய்யப்படும் மாணவர்கள் தங்களுடைய பொருளாதார நெருக்கடி மற்றும் பிற காரணங்களுக்காக அந்த வகுப்புக்களை - கல்வியை - தொடர முடியாது இடைநடுவில் கைவிடுவது. இது விடயத்தில் முழு சமூக கட்டமைப்பும் ஈடுபாடு காட்டி, இந்த விடயத்திற்குத் தீர்வு காண வேண்டும். சாதாரண தரம் வரைப் பயின்ற மாணவர்கள், அதற்கு மேல் தொடராமல் இடையில் கல்வியை விட்டு விலகுவதற்கு இடமளிக்காத வகையில் அவர்களுக்கு உதவும் திட்டங்களை அரசும் சமூகமும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

அடுத்தது - உயர்தர வகுப்புக்கு தெரிவான மாணவர்கள் பாட வேலைகளில் பாடசாலைக்குச் சமூகம் தராமல் பிற கல்வி நிலையங்களில் கல்வி பயில்கின்றமை அல்லது பாடசாலை வகுப்புகளுக்கு சமூகம் தர வேண்டியதில்லை என்ற கருத்து நிலைப்பாட்டைப் பின்பற்றுவது.

இந்த இரண்டாவது பிரச்சினையை களைவதற்கு கல்விசார் மட்டத்தில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும் கூட இற்றைவரை அந்த பிரச்சினை நீடித்து வருவது அவதானிக்கப்பட்டு வருகிறது.

உயர்தர வகுப்பின் இறுதி ஆண்டு அல்லது இறுதி தவணைகளில் பாடசாலைகளில் பிரசன்னமாகி கல்வி கற்பது அவசியமல்ல என்ற ஒரு பொறுப்பற்ற எண்ணப்பாடு பல மட்டங்களில் நிலவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் வகுப்பறைகள், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகம், கல்வி வலய மட்டங்கள் என்று பல தளங்களில் இச்சிக்கல் குறித்து ஆராயப்பட்டுள்ள போதிலிலும் இப்பிரச்சினைக்கு இன்னமும் நிரந்தரமான தீர்வு காணப்படவில்லை என்பதுதான் உண்மை.

பாடசாலைக் கல்வியின் மிக உச்ச - உயர் தர - வகுப்பு நிலைக்கு அந்த வகுப்பின் காலகட்டத்தில் நேரடியாகப் பாடசாலைக்குப் பிரசன்னமாகி கல்வி கற்பதற்கு அவசியமற்றது என்ற கருத்து நிலைப்பாடு முழுமையாக மாற்றப்பட வேண்டும்.

“கல்விக்கான ஒவ்வொரு ஒதுக்கீட்டையும் நாட்டின் எதிர்காலத்திற்கான முதலீடாகக் கருதுகிறோம்.” - என்று குறிப்பிடும் பிரதமர், பாடசாலைக் கல்வியின் உச்ச வகுப்பில் மாணவர்கள் பிரசன்னம் குறித்து சிரத்தை எடுப்பது மிக அத்தியாவசியமானதாகும்.



# உயர்தர மாணவர்களின் இடைவிலகல் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

உயர்தர மாணவர்களின் இடைவிலகல் தொடர்பில் ஆராயப் பட வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மஹரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எந்தவொரு காரணத்திற்காகவும் பிள்ளைகளின் கல்வி வாய்ப்பு பறிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







# எஸ்.வி.சேகருக்கு ஒரு மாத சிறை தண்டனை; உறுதி செய்தது சென்னை உயர் நீதிமன்றம்

சமூக வலைத்தளங்களில் பெண் பத்திரிக்கையாளர்கள் குறித்து சர்ச்சை கருத்தை பதிவிட்ட வழக்கில் பா.ஜ.கவை சேர்ந்த நடிகர் எஸ்.வி.சேகருக்கு விதிக்கப்பட்ட ஒரு மாத சிறை தண்டனையை உறுதி செய்து சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெண் பத்திரிகையாளர்கள் குறித்து தரக்குறைவாக விமர்சிக்கப்பட்டதை பா.ஜ.கவை சேர்ந்த நடிகர் எஸ்.வி.சேகர் தனது முகநூல் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். இதைத் தொடர்ந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் செயலாளர் மிதார் மொய்தின் அளித்த புகாரின் அடிப்படையில்,



சென்னை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார், இந்திய தண்டனை சட்டம் மற்றும் பெண்கள் மீதான கொடுமைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் அவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை எம்.பி – எம்.எல்.ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், நடிகர் எஸ்.வி.சேகருக்கு ஒரு மாதம் சிறை தண்டனை மற்றும் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டது. சிறப்பு நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நடிகர் எஸ் வி. சேகர் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த வழக்கில் மறு உத்தரவு வரும் வரை நடிகர் எஸ்.வி. சேகருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை சென்னை உயர் நீதிமன்றம் நிறுத்திவைத்து உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் வழக்கில் இறுதி தீர்ப்பு வழங்கிய நீதிபதி பி.வேல்முருகன்,நடிகர் எஸ். வி. சேகருக்கு வழங்கிய ஒரு மாத சிறை தண்டனையை உறுதி செய்து, மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## ஏர் இந்தியா விமானங்களில் இலவச 'வைஃபை' சேவை

உள்நாட்டு வழித்தடங்களில் விமானத்தில் இலவச இணைய அணுகல் (Wi-Fi) வழங்கும் முதல் இந்திய விமான நிறுவனம் என்ற பெருமையை ஏர் இந்தியா பெற்றுள்ளது.

அதன்படி, ஏர் இந்தியாவின் உள்நாட்டுப் பயணிகள் இப்போது இணையத்தில் உலாவவும், சமூக ஊடகங்களை அணுகவும், ஆன்லைன் பணிகளை மேற்கொள்ளவும் அல்லது விமானங்களில் இருந்து நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் செய்திகள் மற்றும் அரட்டைகளை மேற்கொள்ளவும் முடியும்.

ஜனவரி 1, 2025 முதல், ஏர் இந்தியாவின் அ ஏர்பஸ் ஏ350, போயிங் 787-9 மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏர்பஸ் ஏ321 நியோ விமானங்கள் மூலம் இயக்கப்படும் அனைத்து ஏர் இந்தியா விமானங்களிலும் பயணிகள் மேலதிக கட்டணமின்றி இலவச இணையத்துக்கான வசதியை பெற முடியும் என விமான நிறுவனம் நேற்று புதன்கிழமை அறிவித்தது.

இந்த புதிய சேவையின் மூலம், பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்துவதை விமான நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் மேலும் பல விமானங்களுக்கு இந்த சேவையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.






## அண்ணா பல்கலை. விவகாரத்தில் போராட்டம்; பா.ம.கவினர் கைது

அண்ணா பல்கலைக் கழக மாணவி துஷ்பிரயோக சம்பவத்தை கண்டித்தும், அந்த மாணவிக்கு நீதி கிடைக்க வலியுறுத்தியும் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே தடையை மீறி போராட்டம் நடத்த முயன்ற பசுமைத் தாயகம் தலைவர் சவுமியா அன்புமணி கைது செய்யப்பட்டார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி துஷ்பிரயோக சம்பவத்தை கண்டித்தும் அந்த மாணவிக்கு நீதி கிடைக்க வலியுறுத்தியும் பா.ம.க. மகளிரணி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸ் அனுமதி அளிக்கவில்லை. தடையை மீறி போராட்டம் நடத்த பா.ம.கவினர் திட்டமிட்டனர். அதையடுத்து சென்னை வள்ளுவர் கோட்டம் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த எந்தத் திசையில் இருந்து பா.ம.கவினர் வந்தாலும் கைது செய்ய பொலிஸார் காத்திருந்தனர். அதன்படி ஆர்ப்பாட்டம் நடத்த வந்த பா.ம.க. நிர்வாகிகள், பெண் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நிலையில் வள்ளுவர் கோட்டம் பகுதிக்கு பசுமைத் தாயகம் சவுமியா அன்புமணி காரில் வந்தார். பொலிஸார் அவரைக் கைது செய்ய தயாராக இருந்தனர்.

காரினை மகளிர் பொலிஸார் சுற்றி வளைத்தனர். அதனால் காரில் இருந்தபடியே செய்தியாளர்களிடம் சவுமியா அன்புமணி பேசினார். அதையடுத்து காரில் இருந்து இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற சவுமியா அன்புமணியை பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர். பா.ம.கவினர் உரக்க கோஷமிட்டதால் அப்பகுதியில் சற்று நேரம் பரபரப்பு நிலவியது என தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# ட்ரம்பின் ஹோட்டலுக்கு வெளியே வெடித்து சிதறிய டெஸ்லா சைபர்ட்ரக்




அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு சொந்தமான உணவகம் ஒன்றின் வாசலில், எலான் மஸ்க்கின் டெஸ்லா நிறுவனத்தின் சைபர்ட்ரக் வெடித்துச் சிதறியுள்ளது.

புத்தாண்டு அன்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் பலியான நிலையில், 7 பேர் காயமடைந்துள்ளனர்.

நெவாடா மாகாணத்தில் உள்ள லாஸ் வேகாஸ் நகரில் டொனால்ட் ட்ரம்பிற்கு சொந்தமான உணவகம் உள்ளது.

இந்த உணவகத்திற்கு வெளியே டெஸ்லா சைபர்ட்ரக் எனப்படும் கார் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், புத்தாண்டு நாளான புதன்கிழமை திடீரென்று இந்த சைபர்ட்ரக் வெடித்துச் சிதறியுள்ளது.

இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், 7 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மொண்டினீக்ரோ துப்பாக்கிச் சூடு; 3 நாள்களுக்கு தேசிய துக்கதினம்



தெற்கு மொண்டினீக்ரோவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் இரண்டு சிறுவர்களும் அடங்குவர் என வெளிநாட்டு ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விருந்துபசாரம் ஒன்றின் போது இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை அடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபரும் தமது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தை மிகவும் சோகமான விடயமெனக் குறிப்பிட்டுள்ள மொண்டினீக்ரோ பிரதமர், முதல் 3 நாள்களுக்கு தேசிய துக்க தினமாக அறிவித்துள்ளார்.

# தாய்லாந்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 5 பேர் பலி



தாய்லாந்தில் சுற்றுலா பஸ் விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு தாய்லாந்தில் உள்ள யாலா மாகாணத்திற்கு சுற்றுலா செல்வதற்காக பாங்காங் அருகே குழு ஒன்று பஸ்ஸில் சென்று கொண்டிருந்தன நிலையில், பஸ் சூரத் தானி மாகாணத்தில் உள்ள வீதியின் வளைவில் திரும்பும்போது மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது

இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்

மேலும்இந்தசம்பவம்பற்றிபொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2025




இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் வீட்டில் விருந்தினர் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருப்பீர்கள். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு பெறுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




இன்று நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் பேசும் போது பாதகமான விளைவுகள் ஏற்படா வண்ணம் வார்த்தைகளை கவனித்துப் பேச வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணியில் குறைந்த அளவு திருப்தியே காணப்படும். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்களின் பதட்டமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்விற்கு நட்பான அங்குமுறை வேண்டும்.

இன்று நிதிநிலைமை லாபம் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே . பற்களை நன்கு பாதுகாக்க வேண்டும். உணவில் கவனம் தேவை.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பிறரிடம் உரையாடுவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து உரையாடுங்கள். பிரார்த்தனை மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பொறுமையாக விஷயங்களைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணையிடம் எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவதை தவிர்க்கவும்.

பணபுழக்கம் போதிய அளவில் இருக்காது. உங்கள் நெருங்கிய நபர் ஒருவரின் திடீர் மருத்துவ செலவை சந்திக்க நேரும்.




இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் உடன் பிறந்தவர்களால் தொல்லையும் பிரச்சினைகளும் ஏற்படும். இன்று அவர்களை தவிர்ப்பது நல்லது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் உழைப்புக்கு தகுந்த அங்கீகாரமும் நன்மதிப்பும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பேசும் போது அமைதியைக் கடைபிடிக்கவும். சில சமயங்களில் நீங்கள் அமைதி இழக்க நேரலாம். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் அதிகம் செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் லட்சியங்களை அடைவதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இன்று நீங்கள் சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காரணமாக சோர்ந்து போவீர்கள். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அப்பொழுதான் அதற்குரிய பலன் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இத்தைகைய உணர்ச்சிகளை தவிர்ப்பது நல்லது.

பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. பணத்தை முடிந்த அளவு சேமிக்க நீங்கள் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய இன்று கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு தன்னம்பிக்கை அவசியம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். நல்ல பலன் காண பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

பணிகளைக் கையாளும்போது உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். உங்கள் பணிக்கு தகுந்த அங்கீகாரமும் நன் மதிப்பும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாகவும் நேரடியாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

நிதிநிலையில் இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் தன்னம்பிக்கை காரணமாக இன்று நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2025




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை குறைந்த முயற்சியில் செய்து முடிப்பீர்கள். புதிய முதலீடுகள் நன்மை அளிக்கும். உங்கள் தன் னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப் பீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையிடம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்கள் குடும்ப அபிவிருத்திக்காக செலவு செய்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன் கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப் பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற் கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற் கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந் திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணை யுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.

# சீமெந்து ஏற்றிச் சென்ற பாரவூர்தி குடை சாய்ந்ததில் இருவர் காயம்

## ஓமந்தையில் நேற்று விபத்துச் சம்பவம்








**(கி.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தை பகுதியில் சீமெந்தினை ஏற்றி சென்ற பாரவூர்தி குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்தை ஏற்றிச் சென்ற பாரவூர்தியே இவ்வாறு குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் பாரவூர்தியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை போக்கு வரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர்.